# கனடா-காரை கலாசார மன்றம்

## தமிழ்மொழித் திறன் போட்டி – 2022

### பேச்சு – அதிமேற் பிரிவு (7ஆம் 8ஆம் 9ஆம் தரமாணவர்கள்

# ஔவை காட்டிய வழி

“அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது”

என்று மானிடப் பிறப்பின் மகத்துவத்தை எடுத்துக் கூறியவர் ஔவை மூதாட்டி. அன்னைத் தமிழுக்கே பெருமை ஈட்டிக் கொடுத்தவர் இப்பெருமாட்டி. மனித குலம் மதிப்போடு வாழ அவர் மேலும் பல வழிகளைப் பகிர்கின்றார்.

“மதியாதார் தம் மனையை மதித் தொருகாற் சென்று
மிதியாமை கோடி பெறும்”

என்றும் பாடி அவரே மனித கௌரவத்தின் கௌரவத்தை கௌரவத்தோடு அறியத்தருகின்றார்.

ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நன்னூல் போன்ற அறிவுக் களஞ்சியங்களை ஆக்கியவரும் அன்னவரே. பசித்தவர்க்குக் கொடுத்த பின் புசிக்க வேண்டும் என்பது இவர் கோட்பாடு. இதனை “ஐயம் இட்டுண்” எனும் சொற்களால் அழுத்தமாகச் சொல்கின்றார்.

பிச்சை கொடுக்கச் சொல்லும் இந்தப் பெருமாட்டி பிச்சை எடுக்கக் கூடாது என்கிறார். “ஏற்பது இகழ்ச்சி” என இடித்துரைக்கின்றார்.

எண் எழுத்து இகழேல், ஓதுவது ஒழியேல், பிச்சை புகினும் கற்கை நன்றே என்ற பாவடிகள் மூலம் கல்வியின் அவசியத்தை துல்லியமாய்த் தெரியத் தருகின்றார்.. “கொடுமையிற் கொடுமை இளமையில் வறுமை” என்று பாடி பன்னூறு ஆண்டுகட்கு முன்னரே பாலகரில் பரிவு காட்டிய அந்நாள் திரேசா இவர்.

அதியமானிடம் நெல்லிக் கனியும் கந்தவேளிடம் நாவற் கனியும் பெற்ற நற்றமிழ்க் கனி இவர். மும்மன்னரும் போற்றிய மூதறிஞர் ஔவையார் என்ற இம் அம்மையார்.

அன்னவர் வழி நிற்போம், அருந்தமிழராய் நிலைப்போம்!

நன்றி! வணக்கம்!!